**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 608/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | சுப்பையா, வயது 59 |
| Father Name/Husband Name | : | தர்மன் |
| Village | : | எட்டையாபுரம் |
| Taluk | : | எட்டையாபுரம் |
| Calling | : | மில்லில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st day of August 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எட்டையாபுரத்தில் வசித்து மில்லில் வேலை செய்கிறேன். கடந்த 21.09.2021 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் நாலாட்டின்புதூருக்கு போனேன். அங்கு அகஸ்டின் என்பவரிடம் கிழக்கு போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தனர்.
2. விசாரிக்கும் போது 2013 ஆம் தேதி கென்னடி மற்றும் அவரது அம்மாவையும் உறுப்பினர் பதிவில் இருந்து நீக்கிவிட்டனர். அதன் பின்னர் அவர்கள் உரிமையியல் நீதிமன்றத்திற்கு போனர். பின்னர் 2015 ல் அவர்களை உறுப்பினராக சேர்க்க சொல்லி அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வந்தது.,
3. அகஸ்டின் நீதிமன்ற உத்தரவிற்கு பிறகும் கென்னடி மற்றும் அவரது அம்மாவை உறுப்பினராக சேர்க்காமல் இழுத்தடித்துக்கொண்டிருந்தார். அதன் பின்னர் அகஸ்டின் பள்ளியில் உள்ள ரப்பர் ஸ்டாம்பை தவறாக பயன்படுத்தியுள்ளார். அதற்கு கென்னடி மற்றும் அவரது தாயார் நீதிமன்றத்திற்கு போனார்கள்.
4. அந்த வழக்கின் தீர்ப்பில் அகஸ்டின் செய்தது தவறு தான் என்று தீர்ப்பு வந்தது. அகஸ்டின் குறிப்பிட்ட காலம் தமிழ்பாபிஸ்து சபையில் தலைவராக இருந்தார். கென்னடிக்கும் அவரது அம்மாவிற்கும் நிறைய இடைஞ்சல்கள் கொடுத்தார். சஞ்சீவி என்பவரும் மேற்படி குழுவில் தலைவராக இருந்தார். பின்னர் அவர் இறந்துவிட்டார்.
5. பின்னர் கென்னடி என்பவர் தமிழ்பாபிஸ்து சபையை

பயன்படுத்தலாம் என்று தீர்ப்பு வந்தது. பின்னர் அகஸ்டின் என்பவர் காவல் ஆய்வாளரிடம் வாக்குமூலம் அளித்தார். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீங்கள் இந்துவா கிறிஸ்டினா என்றால் இந்து. கோவில்பட்டியில் குடியிருந்திருக்கிறீர்களா என்றால் இல்லை. தற்போது கோவில்பட்டியில் வசிக்கிறீர்கள் என்றால் சரிதான். எத்தனை வருடமாக வசிக்கிறீர்கள் என்றால் ஒருவருடமாக வசிக்கிறேன். அ.சா.1 ஐ உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் எனது மகன் அவரது பள்ளியில் படித்ததால் தெரியும்.
2. அ.சா.1 உங்கள் மகன் படித்த பள்ளியின் தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். பள்ளிநிர்வாகத்தில் இருந்து அவரை தலைமையாசிரியர் பதவியில் இருந்து நீக்கிவிட்டனர் என்றால் எனது மகன் படித்தவரை அப்படி எதுவும் கேள்விப்படவில்லை. அகஸ்டினை எப்படி தெரியும் என்றால் ஜான் என்பவர் மூலமாக தெரியும்.
3. அ.சா.1 ற்கும் உங்களுக்கும் எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 10 வருடமாக தெரியும். அ.சா.1 ன் அம்மாவை உங்களுக்கு தெரியுமா என்றால் அவரையும் 10 வருடமாக தெரியும். சிவில் கேஸ் நடந்ததாக சொல்லியுள்ள விவரம் பற்றி அ.சா.1 ம் அவரது அம்மாவும் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல பள்ளியில் சொன்னார்கள் அதனால் தெரியும்.
4. உங்கள் மகன் எந்த பள்ளியில் படித்தார் என்றால் எட்டையாபுரம் பள்ளியில் படித்தார் அதனால் தெரியும். பாப்பிஸ்து சங்கம் எங்கு உள்ளது என்றால் தெரியாது. முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் நீங்கள் கேள்விப்பட்டது என்றால் சரிதான்.
5. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் யாரும் உங்களை விசாரிக்கவில்லை என்றாலும் வழக்கின் விவரங்கள் உங்களுக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. அ.சா.1 கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.